Registered as a News Paper     பக்கங்கள் 04     விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM     Peoples Daily     மக்கள் தினசரி

நாதம் 03     திருவள்ளுவர் ஆண்டு 2023     கார்த்திகை 24     (09-12-1992)     புதன்கிழமை     ஓசை 295

## ஐ. நா. பிரதிநிதிகள் புலிகள் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ள அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலய பிரதிநிதிகள் இன்று விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள் முக்கிய விடயங்கள் பற்றி பேச்சுவார்த்தை நடாத்தியபின் மாலையில் கொழும்பு திரும்புவர் என தெரியவருகிறது. கொழும்பில் இப்பிரதிநிதிகள் அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தவுள்ளனர். இவர்கள் அமைச்சர்களுடனான சந்திப்பின் போது யாழ். கடலில் மீன்பிடிக்க அரசு [4 ஆம் பக்கம் பார்க்க]

### இரண்டாவது நாளாகவும்

# இந்தியாவில் கலவரம்

# 370 பொதுமக்கள் பலி

## பல இடங்களில் பொலிஸ் சூடு

(டில்லி)

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இரண்டாவது நாளாக நேற்றும் பல்வேறு மாநிலங்களில் இந்து முஸ்லிம் மோதல்களும், வன்செயல்களும் இடம் பெற்றதாகவும், பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் கடந்த இரு தினங்களிலும் ஏற்பட்ட கலவரங்களில் 870 பேர் இறந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இறந்தவர்களில் சுமார் 200 பேர் நேற்றுமுன்தினமும், 170 பேர் நேற்றும் கொல்லப்பட்டனர். இதில் பலர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகியுள்ளனர்.

நேற்று பம்பாயிலேயே பலத்த மோதல்கள் ஏற்பட்டதாகவும், அங்கு 30 பேர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. அசாமில் 15 பேர் கொல்லப்பட்டதாகவும், இவர்களில் பெரும்பாலானோர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கேரளாவில் நேற்று நடைபெற்ற வன்செயல்களில் ஒருவர் பொலிஸாரின் சூட்டிற்குப் பலியானார். இன்னும் ஒருவர் கத்திக்குத்துக்குப் பலியானார். கேரளாவில் ஆறு இடங்களில் பொலிஸாரினால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

கர்நாடகமாநிலத்தில் இடம்பெற்ற வன்செயல்களில் 13 பேர் பலியாகியதாகவும், ஆந்திரப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற வன்செயலகளில் ஆறு பேர் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### பாபர் மசூதி இடிப்பு;

# குற்றவாளிகளை கண்டுபிடிக்க நீதி விசாரணைக் குழு

## -பிரதமர் நரசிம்மராவ் அறிவிப்பு

(டில்லி)

பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கு காரணமானவர்களை ... கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

இடிந்து போன பாபர் மசூதி ... எல்லா முடிவுகளும் எடுக்கப்படும் என்றார் அவர்.

இதே வேளை ஜனதா கட்...

## வங்கி அலுவலக நேரம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் உள்ள சகல இலங்கை வங்கிக் கிளைகளும் தமது கிளை அலுவலக நேரத்தை வாடிக்கையாளர் நன்மை கருதி விஸ்தரித்துள்ளதாக யாழ் இலங்கை வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

நேற்று முன்தினம் தொடக்கம் சகல வங்கிக் கிளைகளும் காலை 9-00 மணி தொடக்கம் 12 மணி வரை விஸ்தரித்துள்ளதாக வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது (பா)

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் வலி-தெற்குப் பகுதிகளை நோக்கிச் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினமிரவு 8-30 மணி தொடக்கம் நள்ளிரவு வரை இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட வண்ணமிருந்தன. மேற்படி பகுதியில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. எனினும் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றித் தெரியவரவில்லை. (பா)

## இன்று சர்வாலய தீபம்

(கொழும்புத்துறை)

இந்துக்களின் முக்கிய பண்டிகையான திருக்கார்த்திகைத் தீபத் திருநாள் பௌர்ணமி நாளான இன்று மாலை சகல இந்து ஆலயங்களிலும், இந்து மக்களின் இல்லங்களிலும் தீபங்கள் ஏற்றிக் கொண்டாடப்படும்.

சில ஆலயங்களில் சுவாமி வீதிவலம் வந்து சொக்கப்பானையில் தீபம் ஏற்றலும் இடம்பெறும். (24)

### திருமதி லலி கொப்பேகடுவ

# பிரேமதாசாவிடம்

# மன்னிப்பு கோரினார்

(கொழும்பு)

"எனது அரசியல் அறியாமை காரணமாக எனது நோக்கம் அரசியல் சதுரங்கம் ஆடப்படுவதற்கு பயன்படுத்தப்பட்டது பற்றி நான் வருந்துகிறேன். டென்சிலோ அல்லது நானோ எந்த சமயத்திலும் அரசியலில் ஈடுபாடு கொள்ளவில்லை என நான் மிகத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். அத்தகைய அபிப்பிராயம் உங்களுக்கு ஏற்பட்டிருந்தால் அதற்காக எனது மனமார்ந்த மன்னிப்பைக் கோருகின்றேன்''.

இவ்வாறு திருமதி லலி கொப்பேகடுவ நேற்று முன்தினம் சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் மன்னிப்புக் கோரியிருந்தார்.

திருமதி லலி கொப்பேகடுவ அனுப்பிய கடிதத்தின் முழுவிபரமும் வருமாறு:

முதலாவதாக மறைந்த எனது கணவரான டென்சில் கொப்பேகடுவவும் ஏனைய 9 பேர்களும் அராலித்துறையில் சென்ற ஆகஸ்ட் 8 ஆம் திகதி மரணமடைந்ததை விசாரிப்பதற்கு சர்வதேச ஆணைக் குழுவொன்றை நியமிக்குமபடி நான் விடுத்த வேண்டு கோளுக்கு உடனே இணக்கம் தெரிவித்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியறிதலை தெரிவிக்கின்றேன்.

நான் நீதி நியாயத்தையும், உண்மையையும் கண்டறிய விழைந்தேன். எனது அரசியல் அறியாமைகாரணமாக எனது நோக்கம் அரசியல் சதுரங்கம் ஆடப்படுவதற்கு பயன்படுத்தப்பட்டது பற்றி நான் வருந்துகின்றேன்.

எனது கணவர் கொலை செய்யப்பட்ட நாளிலிருந்து அந்த சம்பவம் பற்றி எனக்கு சில சந்தேகங்கள் இருந்தன. பின்பு எனக்கு மாத்திரம் இத்தகைய சந்தேகம் இருக்கவில்லை என்பது தெரிய

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமதி கொப்பேகடுவவின் கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

முன்னாள் ராணுவத்தளபதி டென்சில் கொப்பேகடுவவின் மரணம் தொடர்பாக சர்வதேச விசாரணைக்குழு அமைப்பது தொடர்பாக திருமதி லலி கொப்பேகடுவ விடுத்த கோரிக்கையும் அது தொடர்பான தொடர் நடவடிக்கைகளும் சில அரசியல் வாதிகளால் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதாக லலி கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு நேரில் விளக்கமளிக்க ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு ஜனாதிபதியின் செயலாளர் விஜயதாசாவைத் திருமதி லலி கொப்பேகடுவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அகதி முகாம்களை பொறுப்பேற்க

னர். இதில் பல பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகியுள்ளனர்.

நேற்று பம்பாயிலேயே பலத்த மோதல்கள்ஏற்பட்டதாகவும், அங்கு 30 பேர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

ஸாரின் துப்பாக்கிச் சூட்டுக் குப் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கேரளாவில் நேற்று நடைபெற்ற வன்செயல்களில் ஒருவர் பொலிஸாரின் சூட்டிற்குப் பலியானார். இன்னும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

கர்நாடகமாநிலத்தில் இடம்பெற்ற வன்செயல்களில் 13 பேர் பலியாகியதாகவும், ஆந்திரப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற வன்செயலகளில் ஆறு பேர் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

**பாபர் மசூதி இடிப்பு;**

# குற்றவாளிகளை கண்டுபிடிக்க நீதி விசாரணைக் குழு

## -பிரதமர் நரசிம்மராவ் அறிவிப்பு

(டில்லி)

பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கு காரணமானவர்களையும், காரணங்களையும் கண்டுபிடிப்பதற்கு நீதி விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்படும், சம்பவங்களை அடுத்துப் பதவி விலகிய முதலமைச்சர் கல்யாண் சிங்கிற்கு எதிராக விசாரணை நடத்தப்படும் என்று பிரதமர் பி.வி. நரசிம்மராவ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

இடிந்து போன பாபர் மசூதியைக் கட்டும் போதும், ராமர் ஆலயத்தை உருவாக்கும் போதும் விஷமிகள் மீண்டும் தலையிடத்தான் செய்வார்கள். அவற்றையும் சமாளித்து இரு பொறுப்புகளையும் நிறைவேற்றியே தீருவோம் என்று பிரதமர் சூளுரைத்தார். வகுப்புவாத இயக்கங்களை நாட்டில் தடை செய்வதற்கு எல்லா முடிவுகளும் எடுக்கப்படும் என்றார் அவர்.

இதே வேளை ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி "நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அயோத்தி ராமர் ஆலயம் இடிக்கப்படவில்லை என்பது நிரூபிக்கப்பட்டால், தான் பாபர் மசூதியை அரசு மீண்டும் கட்ட வேண்டும்'' என்று கூறியிருக்கிறார்.

# அத்வானி, ஜோஷி உட்பட பாரதீய ஜனதா தலைவர்கள் கைது

[டில்லி]

பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்களும, பாராளுமன்ற உறுப்பினர்களுமான எல்.கே. அத்வானி, முரளிமனோகர் ஜோஷி, செல்வி உமாபாரதி ஆகியோரும், விஷ்வஹிந்துப் பரிஷத் தலைவர்களான விஷ்ணு ஹரிடால்மியா, அசோக சிககல், பஜ்ரால்தள் தலைவர் தினேஸ் கதியார் ஆகியோரும் நேற்றுமுன்தினம் காலை புதுடில்லியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

உத்தரப் பிரதேசப் பொலிஸருக்கு உதவும் நோக்கில், டில்லிப் பொலிஸார் அவர்களைக் கைதுசெய்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை உத்தரப்பிரதேசம், குஜராத், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் ஆங்காங்கே சில வன்செயல் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

உத்தரப் பிரதேசத்தின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய ராமர் ஆலயத்தில் வெண்கலத்திலான சிலை

(டில்லி)

அயோத்தியில் நேற்று முன்தினம் தகர்க்கப்பட்ட பாபர் மசூதி இருந்த இடத்தில் ஒரு இந்து ஆலயமும் அதனுள் வெண்கலத்தினால் செய்யப்பட்ட ராமர் சிலை ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது.

அயோத்தியில் கூடியிருந்த இந்து அடிப்படை வாதிகளைத் துரத்தும் முயற்சியாக நேற்றுக் கண்ணீர்ப் புகைப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# அயோத்திப் பிரதேசம் ராணுவத்தின்கட்டுப்பாட்டில்

[டில்லி]

அயோத்தியாவில் சர்ச்சைக்குரிய கட்டடப் பகுதி உட்பட நகரம் முழுவதையும் மத்திய றிசர்வ் படை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது

துப்பாக்கிச் சூடு எதுவும் நடத்தப்படாமல் ஆயிரக்கணக்கான திருப்பணித் தொண்டர்கள் தடியடி மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகத்தின் மூலம் கலைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. றிசர்வ் படை துரித நடவடிக்கையை தொடங்கிய போது திருப்பணித் தொண்டர்கள் முதலில் கல்லெறி நடத்தினாலும் பின்னர் திரள்திரளாகக் கலைந்து சென்றதாகக் கூறப்படுகிறது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

மலாகம், ஏழாலை, தெல்லிப்பழை ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. எனினும் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றித் தெரியவரவில்லை. (பா)

## இன்று சர்வாலய தீபம்

(கொழும்புத்துறை)

இந்துக்களின் முக்கிய பண்டிகையான திருக்கார்த்திகைத் தீபத் திருநாள் பௌர்ணமி நாளான இன்று மாலை சகல இந்து ஆலயங்களிலும், இந்து மக்களின் இல்லங்களிலும் தீபங்கள் ஏற்றிக் கொண்டாடப்படும்.

சில ஆலயங்களில் சுவாமி வீதிவலம் வந்து சொக்கப் பானையில் தீபம் ஏற்றலும் இடம்பெறும். (24)

## தமிழகத்தில் நாளை பந்த்

(சென்னை)

அயோத்தியாவில் பாபர் மசூதி தகர்க்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவிக்கும் முகமாகத் தமிழகத்தில் நாளை பந்த் நடத்த ஆளும் அ.இ. அ.தி.மு.க. உட்பட தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சிகள் அனைத்தும் தீர்மானித்துள்ளன.

## இந்துக்களுக்கு எதிராக பாகிஸ்தானில் தாக்குதல்

அயோத்தியில் மசூதி இடிக்கப்பட்டதைக் கண்டித்து நேற்றுப் பாகிஸ்தானில் இடம்பெற்ற தேசியஎதிர்ப்புத்தினத்தில் பல வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானில் குஸ்தான் என்ற இடத்தில் கோயில்மீது தாக்குதல் நடாத்தியதில் ஒர் இந்து கொல்லப்பட்டார். ஐவர் காயமுற்றனர். பல இடங்களில் கோயில்கள்மீது தாக்க முயன்ற கும்பல்களை அடக்க பரா இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஒரு கோயில் மீது வைக்கப்பட்ட தீ இந்துக்களின் குடியிருப்புக்கள் மீது பரவியதால் 250 குடிசைகள் நாசமாகின. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. ஹைதராபாத்தில் மதுபானக்கடைகள் தாக்கப்பட்டன.

தலைநகர் இஸ்லாமாபாத்தில் ஆர்ப்பாட்டக்காரருக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழ் நாட்டில் பரவலாக நேற்றும் வன்முறை

## இருவர் பலி; 50 பேர் காயம்

(சென்னை)

தமிழகத்தில் ஆங்காங்கே இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து அனைத்துக் கல்வி நிலையங்களும் இன்று முதல் வரும் ஞாயிறு வரை மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலிக்கு அருகிலுள்ள மேலைப் பாளையத்தில்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## இந்துக்கள் தாக்கினால் இந்தியாவை பிளவுபடுத்துவோம்

### -டில்லி இமாம் எச்சரிக்கை

(டில்லி)

இஸ்லாமிய புனித இடங்களை இந்து சமய அடிப்படைவாதிகள் தொடர்ந்து தாக்கினால் இந்தியாவை நாம் பிளவுபடுத்துவோம் என்று புதுடில்லி பள்ளிவாசல் பிரதம மதகுரு இமாம் செய்யத் அமமெட் புகாரி எச்சரித்துள்ளார்.

மேலும், இந்தியாவில் உள்நாட்டுப் போர் ஒன்றை நடத்துவோம் என்றும் அவர் கூறினார்.

தில் மன்னிப்புக் கோரியிருந்தார்.

திருமதி லலி கொப்பேகடுவ அனுப்பிய கடிதத்தின் முழு விபரமும் வருமாறு:

முதலாவதாக மறைந்த எனது கணவரான டென்சில் கொப்பேகடுவவும் ஏனைய 9 பேர்களும் அராலித்துறையில் சென்ற ஆகஸ்ட் 8 ஆம் திகதி மரணமடைந்ததைவிசாரிப்பதற்கு சர்வதேச ஆணைக் குழுவொன்றை நியமிக்குமபடி நான் விடுத்த வேண்டுகோளுக்கு உடனே இணக்கம் தெரிவித்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியறிதலை தெரிவிக்கின்றேன்.

நோக்கம் அரசியல் சதுரங்கம் ஆடப்படுவதற்கு பயன்படுத்தப்பட்டது பற்றி நான் வருந்துகின்றேன்.

பின்பு எனக்கு மாத்திரம் இத்தகைய சந்தேகம் இருக்கவில்லை என்பது தெரிய

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமதி கொப்பேகடுவவின் கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

முன்னாள் ராணுவத்தளபதி டென்சில் கொப்பேகடுவவின் மரணம் தொடர்பாக சர்வதேச விசாரணைக்குழு அமைப்பது தொடர்பாக திருமதி லலி கொப்பேகடுவ விடுத்த கோரிக்கையும் அது தொடர்பான தொடர் நடவடிக்கைகளும் சில அரசியல் வாதிகளால் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதாக லலி கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு நேரில் விளக்கமளிக்க ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு ஜனாதிபதியின் செயலாளர் விஜயதாசாவைத் திருமதி லலி கொப்பேகடுவ

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# அகதி முகாம்களை பொறுப்பேற்க ஐ. நா. அதிகாரிகளிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் உள்ள பெரிய ஆறு அகதிமுகாம்களை பொறுப்பேற்று நடாத்தும்படி அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் ஆலயத்தின் பிரதிநிதிகளிடம் யாழ். அரச அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இவ் அதிகாரிகள் யாழ் செயலகத்தில் யாழ். அரசஅதிபர் கா. மாணிக்கவாசகரை சந்தித்த போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

யாழ். அரச அதிபரின் இக் கோரிக்கைக்கு அப்பிரதிநிதிகள் தங்களால் தற்பொழுது எந்த முடிவும் சொல்ல முடியாது எனவும் தாங்கள் ஜெனிவா சென்றதும் அங்கு அதிகாரிகளுடன் ஆலோசித்த பின்னர் முடிவைத் தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவர்களுக்கு யாழ். குடாநாட்டில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து அகதிகளாக தங்கியுள்ள மக்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றியும் யாழ். அரச அதிபரால் எடுத்து விளக்கப்பட்டுள்ளது (பா)

## அகதி முகாம்களை பொறுப்பேற்க தயக்கம்

யாழ் மாவட்டத்தில் இயங்கும் அகதி முகாம்களைப் பொறுப்பேற்க அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் தயக்கம் தெரிவித்துள்ளனர்.

நேற்று யாழ்ப்பாணம் விஜயம் செய்த மேற்படி பிரதிநிதிகளை சந்தித்த யாழ். அரசாங்க அதிபர் மற்றும் அரசசார்பற்ற இணையங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் முகாம்களை பொறுப்பேற்றுமாறு விடுத்த வேண்டுகோளுக்கு அவர்கள் திருப்திகரமான பதிலை அளிக்கவில்லை என தெரியவருகிறது.

இக் கோரிக்கைக்கு பிரதிநிதிகள் பதிலளிக்கையில்; இம் முகாம்களைப் பராமரித்து வரும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தற்போது என்னென்ன பிரச்சினைகளை எதிர் நோக்குகிறார்களோ அதே பிரச்சினைகளையே நாமும் எதிர்நோக்க வேண்டி வரும் முதலில் தேவையான பொருள்களை யாழ்ப்பாணம் எடுத்துவருவதற்கான ஒழுங்கான பாதையை அமைத்து அரசினால் விதிக்கப்பட்டுள்ள

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# போசாக்கின்மை பிரச்சினை ஐ. நா. பிரதிநிதிகளுக்கு தெரிவிப்பு

## அரச சார்பற்ற நிறுவனங்கள் விளக்கின

(யாழ்ப்பாணம்)

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்தடைந்த அகதிகளுக்கான ஐ நா உயர் ஸ்தானிகராலய பிரதிநிதிகள் யாழ் அரசாங்க அதிபர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியதுடன் அகதி முகாமகளையும் பார்வையிட்டனர்.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் உயர் அதிகாரிகள் திரு. சாரிக், டாக்டர் நிக்கலஸ் பீற்றர் ஆகிய இருவருமே நேற்று யாழ் வந்தனர்

ஐ நா. பிரதிநிதிகள் நேற்று பிற்பகல் இரண்டு மணி முதல் யாழ்மாவட்ட அரச சார்பற்ற நிறுவன

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி-5510)

### குத்தகைக்கு

யாழ். பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட பகுதியில் 1 பரப்பு வெறுங்காணி குத்தகைக்குக் கொடுக்கப்படும் மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். T. கனகசபை, 17, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (3767)

### பற் சிகிச்சை நிலையம்

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிரில், கே. கே. எஸ். வீதி, கொக்குவில். தினசரி 4 பி.ப. — 6 பி.ப. ஞாயிறு: 10 மு.ப. — 2 பி.ப. (3231)

### பால் விற்பனைமுகவர்

பாசையூர், குருநகர், கொழும்புததுறை ஆகிய பிரதேசங்களில் பால் விற்பனை செய்ய முகவர்கள் தேவை கட்டட வசதி உள்ளவர்களும், அக்கறை உள்ளவர்களும் 12.12.92-ம் திகதிக்கு முன் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை அனுப்பி வைக்கவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு. (சி-5556)

### வவுனியாவில் 89 பேர் சித்தி

வவுனியா மாவட்டத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 89 மாணவர்கள் மாத்திரமே சித்தியடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது சித்தியடைந்தவர்களில் 16 பேர் மட்டுமே சிங்கள மாணவர்கள் என்று

# சமஷ்டி அரசியலமைப்பிற்கு சிங்கள ஆராய்ச்சிக சங்விதானஎதிர்ப்பு

(கொழும்பு)

சிறிலங்காவிற்கு சமஷ்டி அரசியல் அமைப்பை சிபாரிசு செய்யும் யோசனைக்கு சிங்கள ஆராய்ச்சிக சங்விதான எதிர்ப்பு தெரிவித்துள்ளது. முன்னாள் அமைச்சரான காமினி ஜெயசூரியா தலைமையிலான இவ் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும்

''சமஷ்டி அரசியலமைப்பைஏற்றுக்கொள்வது பிரிவினைக்கு இட்டுச் சென்று விடும் என்ற அச்சம் இருப்பதன் காரணமாக சிங்கள மக்கள் சமஷ்டி அரசியலமைப்பை எப்போதும் எதிர்த்தே வந்துள்ளனர்'' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து சமஷ்டி அரசியலமைப்பை வழங்குவதன் மூலம் மூன்றிலொரு பங்கு நிலமும் ஏறத்தாழ அறுபது சதவிகிதமான கடற்கரையும் 12 7 சதவிகிதமான சிறுபான்மையினர் வசம் போய்ச் சேர்ந்து விடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### திறப்பு

புத்தகாயாவில் அமைக்கப்படும் தங்கவேலியையும், தங்க விதானத்தையும் இம்மாதம் பதினைந்தாம் திகதி பிற்பகல் மூன்றுமணியளவில் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா திறந்து வைக்கவுள்ளார்.

உ
சிவமயம்

## திருவிளக்கு வழிபாடு அங்குரார்ப்பண விழா

### கரணவாய் உச்சிற்புவனேஸ்வரி அம்பாளாலயம், கரவெட்டி.

கார்த்திகை விளக்கீடுத் தினமான 9 12 1992 இன்று புதன்கிழமை பி ப 2.00 மணியளவில் ஆலயத்தின் உள்ளும் புறமும் எம்மூரெங்கும் அருள் அலைகள் நிறைந்து. அன்பும், அமைதியும், செல்வமும், சிறப்பும் வளர்ந்து நாட்டு நலமோங்கவும், மண் மீட்புப் போரிலே இன்னுயிர் நீத்த மாவீரர் ஆத்மா சாந்தியடையவும், போராளிகளின் நலம் பெருகவும் வேண்டி; திருவிளக்கு வழிபாடு அங்குரார்ப்பண விழா ஆரம்பமாகும். விசேட அபிடேகம், பூஜையைத் தொடர்ந்து மங்கல வாத்தியங்களுடன் அம்பாள் வீதிவலம் வருவார்.

சிறப்பு நிகழ்ச்சியாக பி. ப. 4. 00 மணி முதல் 5 00 மணிவரை ''தாயேயாகி வளர்த்தனை போற்றி'' என்னுந் தலைப்பிலே அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர். திரு. இ. ஜெயராஜ் அவர்களின் சொற்பொழிவைத் தொடர்ந்து மகாலட்சுமியாக விளங்கும் திருவிளக்கில் கன்னிப் பெண்களும், சுமங்கலிகளும் அர்ச்சிக்கும் தீப வழிபாட்டின் அங்குரார்ப்பணம் நிகழும்.


கரணவாயைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ ச. சட்டநாதக் குருக்கள் பிரதம குருக்களாகவும், ஸ்ரீலஸ்ரீ வே. கனகசபைக் குருக்கள் உதவிக் குருக்களாகவும் நின்று நிகழ்த்தி வைப்பார்கள்.

குறிப்பு: இவ் வழிபாடு தொடர்ந்து மாதந்தோறும் வரும் பௌர்ணமித் தினங்களில் நிகழும்.

-வழிபடுவோர் சபையும்-
பரிபாலன சபையும்

(3407)

## தசாக கிருகயஞ்ஞ அழைப்பிதழ்

வீரஜனனம்:  வீரச்சாவு:

## ஹெலி பிரசுரம் வீசியது

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா விமானப்படையின் உலங்குவானூர்தி ஒன்று நேற்று முன்தினம் காலையும் மாலையும் இடையிடையே பறந்து திரிந்து யாழ். குடாநாட்டின் கரையோரப் பகுதிகளை நோட்டமிட்டுச் சென்றுள்ளது.

தொடர்ந்து அந்த உலங்குவானூர்தி மாலைவேளையில் கல்முனைப் பகுதியில் உள்ள இராணுவ நிலைகளில் இறங்கி ஏறிச் சென்றதை அவதானிக்க முடிந்தது மேலும் யாழ். குடாநாட்டின் சில பகுதிகளில் துண்டுப் பிரசுரங்களையும் வீசிவிட்டுச் சென்றுள்ளதாக தெரியவருகிறது. [பா]

## கொழும்பிலிருந்து வந்த உரம் காங்கேசனில் தேக்கம்

[யாழ்ப்பாணம்]

கொழும்பில் இருந்து செயர் ஸ்தாபனத்திற்கென ''மெரினால்'' கப்பலில் எடுத்து வரப்பட்ட உர வகைகள் காங்கேசன்துறை துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்றன என தெரிய வருகின்றது

கடந்தமாதம் 'மெரினால்' கப்பல் மூலம் செயர் ஸ்தாபனத்திற்கென யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்ட இவ் உர வகைகளுடன் இக்கப்பல் காங்கேசன் துறையில் தரித்து நின்றது.

ஆனால் காங்கேசன் உணவுக் களஞ்சியத்தில் பழுதடையும் நிலையில் இருந்த உணவுப் பொருள்களை பருத்தித்துறை துறைமுகத்திற்கு அப்புறப்படுத்தும நடவடிக்கையினால் அக்கப்பலில ஏற்றப்பட்ட உர வகைகள் அங்கேயே இறக்கப்பட்டு காங்கேசன் உணவுக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த பின்னர் உணவுப் பொருள்கள் ஏற்றப்பட்டன. இவ் உணவுப் பொருள்களுடன் இக்கப்பல்பருத்தித் துறைக்கு பொருள்களை இறக்க வந்த போது அங்கு ''குமண'' கப்பல் பொருள்களை இறக்கிய வண்ணமிருந்தது. இதனால் அக்கப்பல் காங்கேசன் துறை திரும்பிச் சென்றது மீண்டும் ''குமண'' பொருள்களை இறக்கி முடிந்ததும் இக்கப்பல் பொருள்களை இறக்கத் தொடங்கியுள்ளது.

இவை இறக்கிமுடிந்ததும் காங்கேசன் துறை சென்று அங்குள்ள உரவகைகளை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறைக்கு வரவுள்ளது. இருந்தும் தற்பொழுது உணவுப்பொருள்களுடன் பருத்தித்துறை வந்தடைந்துள்ள ''குமாரி'' கப்பலில் உள்ள பொருள்கள் யாவும் இறக்கிமுடிந்தாலே இவ் உரவகைகளை அங்கு இறக்கமுடியும் என தெரிய வருகின்றது.

வவுனியாவில்

## துப்பாக்கி சூட்டுச் சம்பவம் முஸ்லிம்இளைஞர்மூவர்கைது

வவுனியா நகரில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் ஈடுபட்ட மூன்று முஸ்லிம் இளைஞர்களை பொலிசார் கைது செய்தனர்.

துப்பாக்கியுடன் நடமாடிய இந்த மூன்று நபர்களும் தனிப்பட்ட ஆத்திரம் காரணமாக சில தினங்களுக்கு முன்னர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம். இக் குற்றத்திற்காகவே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா நகரில் வைத்து இவர்களைக் கைது செய்த பொலிசார் விளக்க மறியலில் வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அறிவித்தல்

சகல தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கும்.

பனம் தொழில் வல்லுனர்களுக்கான ஓய்வூதிய பாதுகாப்பு நலன்புரித் திட்டம்.

(45 - 59 வயதிற்குட்பட்டோருக்கு இறுதிச் சந்தர்ப்பம்)

சகல பனம் தொழில் வல்லுனர்களுக்கும் நடைமுறைப்படுத்தவுள்ள மேற்படி திட்டத்தில் இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் 45க்கும் 59க்கும் இடைப்பட்ட வயதுடையோர் தாம் உறுப்புரிமை வகிக்கும் தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கங்களுடன் தொடர்பு கொண்டு, தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ்களை சமர்ப்பித்து பதிவு செய்து பயன்பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்
வடமாகாண தெ ப.பொ.கூ.ச சமாசம்
யாழ்ப்பாணம்.

(சி-5555)

## 31-ம் நாள் நினைவலைகள்



### கப்டன் மதியழகன் (மகலன்)

[நடராசா ரதிஸ்குமார்]

வீரப்பிறப்பு: 16-07-1974
வீரச்சாவு: 09-11-1992

மதியழகா மகலா ரதிஸ்குமரா - உன்னை
சேற்றிலே மலர்ந்த செந்தாமரையென்றோ
காட்டிலே முகிழ்ந்த முல்லை மலரென்றோ
நீ மறைந்த முப்பத்தியோராம் நாளில்
நினைக்கிறோம் வாழ்த்துகிறோம்
வணங்குகின்றோம் அஞ்சலியாய்.

அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

(சி-5554)

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை அனுப்பி வைக்கவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு.

(சி-5556)

## வவுனியாவில் 89 பேர் சித்தி

வவுனியா மாவட்டத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 89 மாணவர்கள் மாத்திரமே சித்தியடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. சித்தியடைந்தவர்களில் 16 பேர் மட்டுமே சிங்கள மாணவர்கள் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்ப் பாடசாலைகளில் வவுனியா மகளிர் மகாவித்தியாலயத்தில் மட்டும் 49 மாணவர்களும். ஓமந்தை மகாவித்தியாலயத்தில் 5 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனராம்.

## சமூகவியல் கற்க அங்கீகாரம்

யாழ். பல்கலைக்கழகத்தில் ''சிறப்புக் கலைப்பாட நெறிக்கு'' ''சமூகவியல்'' ஒரு பாடமாக கற்பிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருக்கிறது

மேற்படி பாடத்தை சேர்த்துக் கொள்வதற்கான அங்கீகாரத்தை இப்பல்கலைக்கழக மூதவை வழங்கியிருக்கிறது. 90/91 ஆம் கல்வி ஆண்டில் இருந்து முதன் முதலாக இப்பாடத்தை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் 91/92 ஆம் கல்வி ஆண்டில் சிறப்புக்கலை மாணவர்களுக்கும் இப்பாடம் கற்பிக்கப்படுகிறது. [05]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### விஞ்ஞான பீடம்

1991/92ஆம் கல்வியாண்டிற்கான வகுப்புகள் 1992-12-07-ம் திகதி ஆரம்பமாகவுள்ளதால், விஞ்ஞானபீட மாணவர்கள் அனைவரும் அன்றே சமுகமளிக்கவும். வகுப்புக்கள் தொடங்கிய மூன்று வாரங்களுள் சமுகமளிக்காவிடின், கல்வியைத் தொடர அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

பதிவாளர்

(சி/5553)

---

வரும் பௌர்ணமித் தினங்களில் திகழும்.

(3407) -வழிபடுவோர் சபையும்- பரிபாலன சபையும்

---

# தசாக கிருகயஞ்ஞ அழைப்பிதழ்



வீரஜனனம்: 30 | 04 | 1962

வீரச்சாவு: 01 | 12 | 1992

## மேஜர் அபயன்

[கிருஷ்ணமூர்த்தி சிவகுமார்]

அபயம் அளிப்பாய் எம் வாழ்வில் என்றே
ஆசையுடன் வளர்த்தோமே - நன்றே
இம்மண்ணையே நேசித்து இந்திய இலங்கை இராணுவத்துடனே
ஈடு இணையற்ற போர் புரிந்த மாவீரனே
உலகமே புகழும் உத்தமன் ஆனாயே
ஊர் எல்லாம் புகழும் மேஜரும் ஆனாயே

அன்பான அக்கா அத்தான் என்றாயே எம்மை
ஆசை தம்பி தம்பி என்றோமே உம்மை
இம் மண் மீட்பே பெரிது என்று
ஈந்தாயே நின் உயிரை இன்று
உண்மையில் மலரும் ஈழம் ஒருநாள்
ஊரெல்லாம் நின் புகழ்பாடும் வாழ்நாள்
எத்தனை இன்னல்கள் அவன் புரிந்தாலும்
ஏங்காது எம்நெஞ்சம் ஒருகாலும்
ஒரே தலைவனே எனக்கென்று
ஓயாமல் உரைத்தீரே
ஔஷதமாயே அவர்களுக்காக வாழ்ந்தீரே!

1 - 12 - 92இல் மட்டக்களப்பில் வீரச்சாவடைந்த கிருஷ்ணமூர்த்தி சிவகுமார் (மேஜர் அபயன்) அவர்களின் இறுதிக்கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும். தசாகம் - 10-12-92 (வியாழன்) கிருகயஞ்ஞம் - 15-12-92 (செவ்வாய்) 16-12-92 (புதன்) நடைபெறும் மதிய போசனத்தில் நண்பர்கள், போராளிகள் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகிறீர்கள்.

அளவெட்டி.

(3771)

தாய், தந்தை, சகோதரர்கள்.

---

ருந்த பினவர் உணவுப் ... வருகின்றது.

வவுனியாவில்

## துப்பாக்கி சூட்டுச் சம்பவம் முஸ்லிம் இளைஞர் மூவர் கைது


வவுனியா நகரில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் ஈடுபட்ட மூன்று முஸ்லிம் இளைஞர்களை பொலிசார் கைது செய்தனர்.

துப்பாக்கியுடன் நடமாடிய இந்த மூன்று நபர்களும் தனிப்பட்ட ஆத்திரம் காரணமாக சில தினங்களுக்கு முன்னர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம். இக் குற்றத்திற்காகவே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா நகரில் வைத்து இவர்களைக் கைது செய்த பொலிசார் விளக்க மறியலில் வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

---

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை அன்ரன்

[தியாகராஜா மன்மதராஜா]

தாயின் மடியில்: 12 - 08 - 1967

மண்ணின் மடியில்: 09 - 12 - 1987

பாசமே பண்பின் உருவே
வாசமாய் மலர்ந்த மலரே
நேசமாய் நினைவில் நிறையும்
நிகரில்லா அன்புச் செல்வமே


சிறுவயதினிலே சிந்தனை பெற்றவனே
சுதந்திர காற்றை சுவாசிக்க எழுந்தவனே
சென்ற பாதையில் இடர்கள் கண்டவனே
உன் இடர்களை நினைக்கையிலே
எம் உள்ளம் கொதிக்குதையா

''மன்மதராஜா வீதி''
தாவடி தெற்கு,
கொக்குவில்.

(3742)

உனது பாதையைத் தொடரும்
அப்பா, அம்மா,
அண்ணாமார், அக்காமார்,
தம்பி, தங்கை, அண்ணி,
அத்தான்மார், பெறாமக்கள்,
மருமகன்.

---



## கப்டன மதியழகன் (மகலன்)

[நடராசா ரதிஸ்குமார்]

வீரப்பிறப்பு: 16- 07- 1974

வீரச்சாவு: 09- 11- 1992

மதியழகா மகலா ரதிஸ்குமரா - உன்னை
சேற்றிலே மலர்ந்த செந்தாமரையென்றோ
காட்டிலே முகிழ்ந்த முல்லை மலரென்றோ
நீ மறைந்த முப்பத்தியோராம் நாளில்
நினைக்கிறோம் வாழ்த்துகிறோம்
வணங்குகின்றோம் அஞ்சலியாய்.

அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

(சி-5554)

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

---

## நினைவு கூருகின்றோம்... 1992-12-09

1986-ம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை-பச்சனூர்ப் பகுதியில் பேருந்தில் வந்த சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

லெப். ரங்கன் (பேச்சிமுத்து விமலநாதன்- கன்னி மேடு- திருக்கோணமலை)

திருக்கோணமலை- பேராற்றுப் பகுதியில் எமது முகாமொன்றின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய-

பவான் (திருக்கோணமலை)

1987-ம் ஆண்டு யாழ். உடுவில் பகுதியில், இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

அன்ரன் (தியாகராசா மன்மதராசா- மன்மதராசா வீதி, தாவடி தெற்கு, கொக்குவில்-யாழ் )

கொக்குவில் பகுதியில் இந்தியப்படையினரின் திடீர்ச் சோதனையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

கப்டன் பாரத் (நடராசா தேவராசா- பாரதிவீதி, மானிப்பாய்- யாழ் )

1988-ம் ஆண்டு ஒந்தாச்சிமடம் பகுதியில் இந்தியப்படையினர் எமது முகாமைச் சுற்றி வளைத்தபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

2-ம் லெப் சிவா (அருளம்பலம் சிவஞானம்- களுதாவளை- மட்டக்களப்பு)

தேச விரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட யாழ். காங்கேசன்துறையைச் சேர்ந்த பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன்,

1989-ம் ஆண்டு சுகவீனம்காரணமாக எமைப்பிரிந்த-

திலிப் (கா. கருணாநிதி- 40-ம் கிராமம்- அம்பாறை)

யாழ். குடாநாட்டில் பரவலாக இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட எமது ஆதரவாளர்கள் 13-பேர்.

1990-ம் ஆண்டு மட்டு - கல்லடிப்பகுதியில் தேச விரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட வங்கி ஊழியரான தமிழ்ப் பொதுமகன்.

வவுனியா- பூந்தோட்டம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட அங்காடி வியாபாரியான தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

### தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி-5552]

### சிந்தனைக்கு

வாழ்க்கையின் தலையாய பணி வாழ்வில் இன்பம் காண்பது தான் என்பதை மனிதனைத் தவிர, மற்றெல்லா விலங்குகளும் அறிந்துள்ளன.

- ஸேமியல் பட்லர் -


ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 09 12 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் - 05


## காமினி ஜெயசூரியாவின் விதண்டாவாதம்

"தனிநாடு ஒன்றை உருவாக்குவதற்கான முதற்படியாக சமஷ்டி அரசமைப்பு முறை அமைந்துவிடும். சமஷ்டி அமைப்பு முறையைக் கொண்ட நாடுகள் எல்லாம் இன்று பிரிந்து செல்கின்றன. இப்படியான பாரதூரமான விளைவுகளுக்கு எதிர்காலத்தில் எமது நாடு ஆளாகும் சாத்தியம் ஏற்படலாம்." இவ்வாறுமுன்னாள் அமைச்சரும், சிங்களப்பாதுகாப்புச் சபையின் தலைவருமான காமினி ஜெயசூரியாவும் தெரிவித்துள்ளார்.

அதாவது, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவது குறித்து சிறிலங்கா அரசியல் வட்டாரங்களில் பரவலாக விமர்சிக்கப்படும் போது திரு. காமினி ஜெயசூரியா இவ்வாறு தனது கருத்தை வெளியிட்டுள்ளார். இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையில் தீர்வுகாண முற்பட்டால் நாடு பிரிந்துவிடும் என்பது அவரது கருத்தாக இருப்பினும், சமஷ்டி அமைப்பு முறையினால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டுவிட முடியுமா என்பதேஇன்று எழுந்துள்ள நிலைமையாகும்

ஏனெனில், சமஷ்டி அமைப்பு முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நிலையை தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டம் கடந்து சென்று விட்டது. தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு தனிநாடு ஒன்று அமைத்தல் ஒன்றே சாத்தியப்பாடானதென்ற நிலை உருவாகி ஆண்டுகள் பலவாகிவிட்டது.

இதேவேளை திரு. காமினி ஜெயசூரியா குறிப்பிட்டதுபோல் உலகிலுள்ள எல்லா சமஷ்டி நாடுகளும் பிரிந்து செல்லா விட்டாலும் 'சமஷ்டி அமைப்பைக்' கொண்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், முன்னால் சோவியத்யூனியனும் பலதுண்டுகளாகச் சிதறி, இன்று பல நாடுகளாக உருவாகியுள்ளமை என்பது ஏற்புடைய உதாரணம்தான். ஆனால், இதற்கு காமினி ஜெயசூரியா குறிப்பிட்டுள்ளது போல் அதாவது புதிய நாடுகள் உதயமானதற்கு சமஷ்டிஅமைப்பில் உள்ள குறைபாடல்லகாரணம்.

## வடக்கு கிழக்கு பகுதிகளில் 583 ஆசிரியர் நியமனங்கள்

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 583 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்க படவுள்ளன,

தெரிவு செய்யப்பட்ட மேற்படி 583 பேருக்கும் அடுத்த ஆண்டு ஜனவரியில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் போது நியமனங்கள் வழங்கப்படும். இதற்கான நடவடிக்கைகளை வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி அலுவலகம் எடுத்துள்ளது. இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட, உழைப்பாளிகளை இழந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு மேற்படி நியமனத்துக்காக தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

## கஷ்டப்பிரதேச ஆசிரியருக்கு புதிய சலுகை அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு.கிழக்குப்பகுதிகளில் உள்ள கஷ்டப்பிரதேசங்களில் கடமையாற்றிவரும் ஆசிரியர்களுக்கு புதிய சலுகைகளும். பதவி உயர்வுகளும் வழங்கப்படவிருக்கிறது. இதற்கான அறிவிப்பை வட-கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர். திரு. கே தியாகராசா விடுத்திருக்கிறார்

மேற்படிபகுதிகளில் கஷ்டப் பாடசாலைகளாகக் கருதப்படும் சுமார் 35 பாடசாலைகள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு மேற்படி சலுகைகளும் பதவி உயர்வுகளும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மாகாணக்கல்வி அமைச்சு எடுத்து வருகிறது.

## குடியேற்றத் திட்டத்தில் தமிழர் புறக்கணிப்பு

(மட்டக்களப்பு

மகாவலி 'பி' வலய குடியேற்றத் திட்டத்தில் தமிழ் மக்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி குடியேற்றத் திட்டம் வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் வருகிறது. இங்கு 90 சத விகிதம் தமிழ் மக்கள் வாழ்கின்றனரெனினும், இக்குடியேற்றத் திட்டத்தில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

## தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர் பற்றி ஆராய்வு

[கொழும்பு]

இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள் எந்தவொரு விசாரணையும் இன்றி நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பாக விசாரணை செய்யும் பொருட்டு விசேட பொலிஸ் உயர் அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவினர் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் கைது செய்யப்பட்டது முதல் தற்போதுள்ள நிலை வரை ஆராய்வர் எனவும், இவர்கள் அளிக்கும் விபரத்தின் அடிப்படையில் நாசகார சம்பவங்களோடு நேரடித் தொடர்பில்லாதவர்கள் மீதான வழக்குகள் மீளப் பெறப்படலாமெனவும் கூறப்படுகிறது.

## பலவத்தை தடுப்பு முகாமில் கைதிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

பலவத்தை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஜே. வி. பி. சந்தேக நபர்கள் உண்ணாவிரதமிருக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இக் கைதிகள் தம்மை விசாரணை செய்யுங்கள் அல்லது விடுதலை செய்யுங்கள் என்ற கோரிக்கை உட்பட பல கோரிக்கைகளை முன் வைத்து ... ரும் இக்கைதிகள் இவ்வாறான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தினர் படை அதிகாரிகளுக்கும் கைதிகளின் பெற்றோருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது எனினும் இப்பேச்சுவார்த்தையின் போது படை அதிகாரிகளால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நேற்றுவரை நிறைவேற்றப்படாமையால் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டம்

## லலி கொப்பேகடுவ நடத்திய செய்தியாளர் மாநாட்டின் பின்னணியில் காமினி

[கொழும்பு]

திருமதி லலி கொப்பேகடுவ பத்திரிகையாளர்கள் முன் தோன்ற வைத்ததில் காமினி திசாநாயக்கா பெரும் பங்கு வகித்துள்ளார் எனவும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் தான் செய்தியாளர் மாநாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்தனர் எனவும் நம்பகரமாகத் தெரிவிக்கப்படுகிறது.

டிசம்பர் 2 ஆம் திகதியன்று கொழும்பு ஹோட்டல் ஒபரோயின் காஞ்சனா அறையில் பிற்பகல் 2 00 மணியளவில் நடந்த இந்தச் செய்தியாளர் மா நாட்டிற்கு திட்டமிட்ட வகையில் குறிப்பிட்ட சில பத்திரிகையாளர்களும், வெளிநாட்டுச் செய்தித் தாபனங்களைச் சேர்ந்தவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். அங்கு திருமதி கொப்பேகடுவவுடன் காமினிதிசாநாயக்கா, லலித்அத்துலத்முதலி, திருமதி சிறிமாவோ, அனுரா, தினேஷ் குணவர்த்தனா, மற்றும் எல். எஸ் எஸ். பி. கம்யூனிஸ்ட், டி. வி.ஜே.பி., எஸ்.எல்.எம்.பி. ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அராலித்துறை கண்ணிவெடிச்சம்பவம் தொடர்பாக கிடைத்த சில புகைப்படங்களுடன் முன்னாள் அமைச்சர் காமினி லண்டனுக்கு சென்றதாகவும், அங்கு டென்சில் கொப்பேகடுவவின் சகோதரரான அசோக கொப்பேகடுவவை சந்தித்துப் பேசியதன் மூலம் திருமதி கொப்பேகடுவ பத்திரிகையாளர் மாநாட்டில் தோன்ற ஏற்பாடு செய்தாரெனவும் கூறப்படுகிறது. மேலும்,

பிரிட்டன் இராணுவத்தின் வெடி குண்டு நிபுணராக இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற வயட் என்பவரை கொழும்புக்கு வரவழைத்துஅவர்கொடுத்த தகவல்களின் அடிப்படையில் தான் திருமதி கொப்பேகடுவ பத்திரிகையாளர் முன்பு தோன்றி சர்வதேச விசாரணைக் கமிஷன் நியமிக்கக் கோரியதாகவும் கூறப்படுகிறது.

சர்வதேச கமிஷன் நியமிக்குமாறு நான் கேட்டுக் கொண்டதில் எந்த ஒரு அரசியல் பின்னணியும் இல்லை, எந்த ஒரு அரசியல் கட்சியுடனும் ஆலோசனை செய்யவில்லை எனவும் திருமதி கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

## காலநடைகளுக்கு தடுப்பூசி

இளிநொச்சிப் பகுதியில் இவ்வருடத்தில் கால்நடை திணைக்களத்தினால் மாடுகள், கோழிகள் உட்பட 73,720 கால்நடைகளுக்கு நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்திடம் கால்நடை முதலுதவி பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களும் இணைந்து தடுப்பூசி ஏற்றுவதில் பங்காற்றியுள்ளனர்.

## விவசாயக் கல்லூரி மீண்டும் இயங்கும்

வவுனியா விவசாயக் கல்லூரி மீண்டும் இயங்க இருக்கிறது

இக்கல்லூரி மீண்டும்இயங்க ஆரம்பித்ததும் விவசாய டிப்ளோமா பாடநெறி உட்பட வேறும்பலகுறுகிய நீண்டகால

## சமஷ்டி ஆட்சிமுறைக்கு சுதந்திரக்கட்சி இணங்காது

--பொதுச் செயலாளர் தர்மசிறி

(கொழும்பு)

நீதியான ஏற்புடைய தீர்வொன்றைக் கண்டு இனப்பிரச்சினையைத் தீர்க்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி தயாராக இருப்பதாகவும், இத்தீர்வு கருத்தொருமைப்பாட்டின் மூலம் காணப்படல் வேண்டுமெனவும், எனினும் சமஷ்டி ஆட்சி முறைக்கு கட்சி இணங்காது எனவும் கட்சியின் பொதுச் செயலாளரான தர்மசிறி சேனநாயக்கா கூறியுள்ளார்.

இதே வேளை தெரிவுக் குழுவின் கருத்தொருமைப் பாட்டிக்கு ஏற்ப இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட இருப்பதாகக் கூறப்படுகிறது. இத்தீர்மானம் ஐக்கிய தேசியக் கட்சியின் 38-வது மாநாடு எதிர்வரும் 20-ம் திகதி கொழும்பு சுகததாசா விளையாட்டரங்கில் இடம் பெறும்போது பொதுச் சபையின் அங்கீகாரத்திற்கும் விடப்படவுள்ளது.

### சர்வதேச விசாரணை கோரிக்கை

## ஏனைய படையினர் உறவினர்கள் ஆதரவு

(கொழும்பு)

லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவினதும், ஏனைய ஒன்பது பேரினதும் மரணம்குறித்து சர்வதேச விசாரணை கமிசன் நியமிக்குமாறு திருமதி கொப்பேகடுவ கோரியிருப்பதைக் கொல்லப்பட்ட ஏனைய ஒன்பது படையினரினதும் உறவினர்கள் வரவேற்றுள்ளனர்:

இந்தக் கோரிக்கைக்கு தாங்கள் முழு ஆதரவு தருவதாகவும், திருமதி கொப்பேகடுவவின் சந்தேகங்களில் குறிப்பிடக் கூடியளவு ஆராயக் கூடியன எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## இஸ்மாயில்கமிஷன் அறிக்கை நான் கோரவில்லை

-லலி கொப்பேகடுவ

கொப்பேகடுவ போன்ற இராணுவ உயரதிகாரிகள் கொலையுண்டமை தொடர்பாக ஆராய்ந்த இஸ்மாயில் கமிஷனின் அறிக்கையைத் தான் கோரவில்லை என்று கொப்பேகடுவவின் விதவை மனைவியான திருமதி லலி கொப்பேகடுவ கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; தான் எந்த அரசியல் கட்சிகளோடும் ஆலோசனை ... வில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

எனினும் திருமதி கொப்பேகடுவ, இஸ்மாயில் கமிஷனின் அறிக்கையைக் கோரியிருப்பதாக வெளிவந்த செய்திகள் ஹோட்டல் ஒபரோயில் பத்திரிகையாளர் சந்திப்புக்கான ஏற்பாடுகளைச் செய்தவர்

குச் அரசியல் தீர்வு ஒன்றினைக் காண்டு விட முடியுமா என்பதேஇன்று எழுந்துள்ள நிலைமையாகும்

ஏனெனில், சமஷ்டி அமைப்பு முறையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நிலையை தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டம் கடந்து சென்று விட்டது. தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு தனிநாடு ஒன்று அமைத்தல் ஒன்றே சாத்தியப்பாடானதென்ற நிலை உருவாகி ஆண்டுகள் பலவாகிவிட்டது.

இதேவேளை திரு. காமினி ஜெயசூரியா குறிப்பிட்டதுபோல் உலகிலுள்ள எல்லா சமஷ்டி நாடுகளும் பிரிந்து செல்லா விட்டாலும் 'சமஷ்டி அமைப்பைக்' கொண்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், முன்னால் சோவியத்யூனியனும் பலதுண்டுகளாகச் சிதறி, இன்று பல நாடுகளாக உருவாகியுள்ளமை என்பது ஏற்புடைய உதாரணம்தான். ஆனால், இதற்கு காமினி ஜெயசூரியா குறிப்பிட்டுள்ளது போல் அதாவது புதிய நாடுகள் உதயமானதற்கு சமஷ்டிஅமைப்பில் உள்ள குறை பாடல்லகாரணம். சமஷ்டி ஆட்சி அமைப்புஎனக் கூறிக்கொண்டாலும் மத்தியில்அதிகாரங்களை குவித்துவைத்துக்கொண்ட 'கம்யூனிஸத்' தலைவர்களின் நடவடிக்கைகளே காரணமாகும். அதாவது சமஷ்டி அமைப்பில் இருந்த குறைபாடுகளின் காரணமாக சமஷ்டி அமைப்பு முறை தோல்வி அடையவில்லை. அதிகாரத்தில் இருந்தவர்களின் அதிகார வேட்கையும் அடக்கு முறைகளுமே சமஷ்டி அமைப்பு முறை தோல்வி அடையக் காரணமாகும்.

இதேவேளை நடைமுறையில், சமஷ்டி அமைப்பென்பது ஒரு தேசிய இனத்தின் விடுதலைக்கு, அதாவது ஒரு புதிய தேசம் உருவாவதற்கு முட்டுக்கட்டையானதே ஒழிய ஒரு புதிய நாடு உருவாவதற்கான அடித்தளம் அல்ல. இந்நிலையே உலகில் இன்று காணப்படுகின்றது. ஒரு நாட்டிலிருந்து சுதந்திரமாகப் பிரிந்து செல்ல முற்படும் சில இனங்கள் இச் சமஷ்டி அமைப்பின் மூலமே தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. கனடா, சுவிற்சலாந்து போன்ற நாடுகளிலும் இதையே காணக் கூடியதாகவுள்ளது.

இந் நிலையில், சமஷ்டி அமைப்பு முறை என்பது தமிழரின் தேசிய இனப் போராட்டத்தைத் தணிப்பதற்கும் காலம் தாழ்த்துவதற்கும் உதவுமே ஒழிய ஒருபோதும், தமிழர் தனிநாடு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுமா என்பது சந்தேகமே. 'மாவட்ட சபைகள்' தமிழீழத்தின் முதற்படி என்று கூறி சிங்கள அரசாங்கத்திடம் கையேந்தி நின்ற தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற தமிழ்க் குழுக்கள் சமஷ்டி என்பது காமினி ஜெயசூரியா கூறுவது போன்று தனிநாட்டிற்கான முதற்படி எனக் கூறி ஏமாற்ற முற்படலாம். ஆனால், உண்மை அவ்வாறானதல்ல.

இந் நிலையில், இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அமைப்பு முறையில் ஒரு தீர்வை சிறிலங்கா அரசாங்கம் காண முடியுமானால் இது சிறிலங்கா அரசிற்கு ஒரு வகையில் கிடைத்த சாதகமான நிலை என்றே கூறலாம். ஏனெனில், இன்றுள்ள நிலையானது இலங்கையில் இரு நாடுகள் உருவாவது தவிர்க்க முடியாத ஒன்றாக தமிழரின் தேசிய இனவிடுதலை போராட்டம் வளர்ச்சியடைந்துவருகின்றமையை எவரும் அவதானிக்கலாம்.

---

...செய்யும் பொருட்டு விசேட பொலிஸ் உயர் அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

...களோடு நேரடித் தொடர்பில்லாதவர்கள் மீதான வழக்குகள் மீளப் பெறப்படலாமெனவும் கூறப்படுகிறது.

# பலவத்தை தடுப்பு முகாமில் கைதிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

பலவத்தை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஜே. வி. பி. சந்தேக நபர்கள் உண்ணாவிரதமிருக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இக்கைதிகள் தம்மை விசாரணை செய்யுங்கள் அல்லது விடுதலை செய்யுங்கள் என்ற கோரிக்கை உட்பட பலகோரிக்கைகளை முன்வைத்து இன்றுமுதல் உண்ணாவிரதமிருக்கப்போவதாக அறிவித்துள்ளனர். இதற்கு முன்னரும் இக்கைதிகள் இவ்வாறான உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தினர். படை அதிகாரிகளுக்கும் கைதிகளின் பெற்றோருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது எனினும் இப்பேச்சுவார்த்தையின் போது படை அதிகாரிகளால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நேற்றுவரை நிறைவேற்றப்படாமையால் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டம் செய்யப்போவதாக கைதிகள் அறிவித்துள்ளனர்.

## தடுப்பூசி

கிளிநொச்சிப் பகுதியில் இவ்வருடத்தில் கால்நடை திணைக்களத்தினால் மாடுகள், கோழிகள் உட்பட 73,720 கால்நடைகளுக்கு நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்திடம் கால்நடை முதலுதவி பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களும் இணைந்து தடுப்பூசி ஏற்றுவதில் பங்காற்றியுள்ளனர்.

## விவசாயக் கல்லூரி மீண்டும் இயங்கும்

வவுனியா விவசாயக் கல்லூரி மீண்டும் இயங்க இருக்கிறது

இக்கல்லூரி மீண்டும்இயங்க ஆரம்பித்ததும் விவசாய டிப்ளோமா பாடநெறி உட்பட வேறும்பலகுறுகிய நீண்டகால பயிற்சிகளும் ஆரம்பிக்கப்பட இருப்பதாக தெரிய வருகிறது.

...டென்சில் கொப்பேகடுவவினதும், ஏனைய ஒன்பது பேரினதும் மரணம்குறித்து சர்வதேச விசாரணை கமிசன் நியமிக்குமாறு திருமதி கொப்பேகடுவ கோரியிருப்பதைக் கொல்லப்பட்ட ஏனைய ஒன்பது படை...

...வேற்றுள்ளனர்.

இந்தக் கோரிக்கைக்கு தாங்கள் முழு ஆதரவு தருவதாகவும், திருமதி கொப்பேகடுவவின் சந்தேகங்களில் குறிப்பிடக் கூடியளவு ஆராயக் கூடியன எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# இஸ்மாயில்கமிஷன் அறிக்கை நான் கோரவில்லை

-லலி கொப்பேகடுவ

கொப்பேகடுவ போன்ற இராணுவ உயரதிகாரிகள் கொலையுண்டமை தொடர்பாக ஆராய்ந்த இஸ்மாயில் கமிஷனின் அறிக்கையைத் தான் கோரவில்லை என்று கொப்பேகடுவவின் விதவை மனைவியான திருமதி லலி கொப்பேகடுவ கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; தான் எந்த அரசியல் கட்சிகளோடும் ஆலோசனை கலக்கவில்லை எனவும், எந்த அரசியல் கட்சியிலும் சேரவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

எனினும் திருமதி கொப்பேகடுவ, இஸ்மாயில் கமிஷனின் அறிக்கையைக் கோரியிருப்பதாக வெளிவந்த செய்திகள் ஹோட்டல் ஒபரோயில் பத்திரிகையாளர் சந்திப்புக்கான ஏற்பாடுகளைச் செய்தவர்களாலேயே வெளியிடப்பட்டதாக தெரியவருகிறது

---

இஸ்லாமிய புனித ஸ்தலங்கள்

# பாதுகாப்பு குறித்து இந்தியா உறுதி அளிக்க வேண்டும்

- பாகிஸ்தான் கோரிக்கை

[இஸ்லாமாபாத்]

''புனித இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்கள் பாதுகாக்கப்படும் என்ற உத்தரவாதத்தை இந்தியா வழங்க வேண்டும். இவ் உத்தரவாதத்தை வழங்குவதற்கு சர்வதேச நாடுகள் இந்தியாவை வற்புறுத்த வேண்டும்'' இவ்வாறு பாகிஸ்தான் பிரதம மந்திரி நவாப் சரீப் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்துத் தீவிரவாதிகளின் மத வெறியைக் கண்டித்த நவாப் சரீப், இந்துக்களிடம் இருந்து முஸ்லிம் மக்கள் பாதுகாக்கப்படுவதற்கும் இந்தியா உறுதி அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அயோத்தி சம்பவத்தைத் தொடர்ந்து விசேட அமைச்சரவைக் கூட்டம் ஒன்றையும் நவாப் சரீப் கூட்டியிருக்கிறார்.

# ஆப்கான் சண்டைகளில் 25 பேர் பலி; 200பேர் காயம்

ஆப்கானிஸ்தான் இடைக்கால அரசின் முஜாகிதீன் கெரில்லாக் குழுக்களுக்கு இடையே மூண்ட சண்டை மத்திய காபூல் பகுதிக்கும் பரவியுள்ளது இதனால் இருபத்தி ஐந்து பேருக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இருநூறுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சர் அகமத் ஷா மசூத் தலைமையிலான குழுவுக்கும், சியாட் முஸ்லிம் குழு ஒன்றுக்கும் இடையே தான் சண்டைகள் மூண்டுள்ளன. இச்சண்டைகளில் கடுமையான பீரங்கித் தாக்குதலும், ராக்கட் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திருமதி இமெல்டா மார்க்கோஸ்

# சுவிஸ் வங்கிக் கணக்கை அரசுக்கு மாற்ற முயற்சி

(மணிலா)

பிலிப்பைன்சின் முன்னாள் அதிபரான பேர்டினன்ட் மார்க்கோஸின் மனைவியான இமெல்டாமார்க்கோஸ் தனது குடும்பத்தின் பெயரில் சுவிஸ் வங்கிகளில் வைப்பிலிடப்பட்டிருக்கும் சொத்துக்களை பிலிப்பைன்ஸ் அரசிற்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக கொங்கொங் பயணமானார்.

அங்கிருந்து ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் சென்று தனது சட்டத்தரணிகளையும் சந்தித்துப் பேசுவார் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

மணிலாவில் பல்வேறு வழக்குகளை எதிர்நோக்கியுள்ள திருமதி இமெல்டா மார்க்கோஸ், தனது குடும்பத்தின் பெயரில் சுவிஸ் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டிருக்கும் 35 கோடி 60 லட்சம் டாலர்களை அரசாங்கத்திற்கு மாற்றுவதற்காக வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியிருக்கிறது

## கடல் முற்றுகை

யூகோஸ்லாவிய மீதான கடல் முற்றுகையை மேலும் இறுக்கமாக்கும் பொருட்டு அல்பேனியக் கடற்பரப்பில் நேட்டோ கடற்படையின் போர்க்கப்பல்களை நிறுத்துவதற்குதிட்டமிட்டு வருகிறது.

## விசா வழங்கல் நிறுத்தி வைப்பு

டாக்காவில் வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள இருக்கும் தலைவர்களின் பாதுகாப்பை முன்னிட்டுபங்களாதேஷ் அரசு வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படும் விசாக்களை தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

# சர்வதேச படைகளுடன் ஒத்துழைக்க தயார்

- சோமாலியா கிளர்ச்சிக் குழுக்கள் அறிவிப்பு

சோமாலியாவின் நெருக்கடிக்கு காரணமாகவுள்ள கிளர்ச்சிக் குழுக்கள் சர்வதேச அமைதிப்படையினருடன் ஒத்துழைக்கத் தாம் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளன.

சோமாலியாவிற்கு வரும் நிவாரண உதவிகளை கிளர்ச்சிக்காரர்கள் சூறையாடி வருவதாகவும், அதனைத் தடுக்க அமைதிப்படையினர் உசாராக செயற்பட உள்ளனர் என்பதும் தெரிந்ததே.

சண்டையிலீடுபட்டு வரும் கிளர்ச்சிக் குழுவொன்றின் தலைவரான மொகமட்பாரா அய்டீட் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியொன்றில், சோமாலியாவில் சண்டையிட்டு வரும் கிளர்ச்சியாளர்கள் ஒன்றிணைய இந்த அமெரிக்கா தலைமையிலான படைகளின் நிலைப்பாடு உதவும் எனக் கூறினார். இதேவேளை மற்றுமொரு கிளர்ச்சிக் குழுவின் தலைவரான அலிமாதி மொகமட் கருத்து வெளியிடுகையில்; துருப்பினருடன் ஒத்துழைக்கத் தாம் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

# போதைப்பொருள் கடத்தல் இருவருக்கு மரணதண்டனை

(சிங்கப்பூர்)

போதைப் பொருள் கடத்தலில்ஈடுபட்டமைக்காகசிங்கப்பூர் நாட்டைச்சேர்ந்த இருவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது.

1989ஆம் ஆண்டில் 68 கிராம் ஹெரோயின்போதைப் பொருளை நாட்டுக்குள் கடத்தி வர முனைந்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சிங்கப்பூரில் 15 கிராமிற்கு மேற்பட்ட ஹெரோயின் அல்லது 30கிராமிற்கு மேற்பட்ட மொர்பின் கடத்திச் செல்வோருக்கு மரணதண்டனை விதிக்கப்படுவது தெரிந்ததே.

# பிரிட்டன் இளவரசி ஆன் விரைவில் திருமணம்

எலிஸபெத் மகாராணியாரின் ஒரே ஒரு மகளான இளவரசி ஆன் கடற்படைத் தளபதி திமோதி லோரன்ஸ் என்பவரை திருமணம் செய்து கொள்ள இருக்கின்றார் என்று பக்கிங்காம் அரண்மனை வட்டாரங்கள் கூறியுள்ளன.

18 வருடகால திருமண வாழ்வுக்குப் பின்னர் கடந்த ஏப்ரல் மாதத்தில் தனது கணவன் மார்க் பிலிப்பிடமிருந்து விவாகரத்து செய்து கொண்டிருந்தது தெரிந்ததே.

ஈழநாதம்

# இனப்பிரச்சினை தீரவில்லை அரசிற்கு எடுத்துரைக்கவுள்ளேன்

## -கனேடிய பேராசிரியர்

(கொழும்பு)

''வட, கிழக்குப் பிரச்சினைக்கு இன்னும் உரிய தீர்வு காணப்படவில்லை என்பதை கனேடிய அரசுக்கு எடுத்துரைக்க உள்ளேன்.'' இவ்வாறு இலங்கை வந்திருக்கும் கனேடியப் பேராசிரியரான திரு.மாரசிங்க தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு நிலைமைகள் குறித்து நேரடியாக ஆராய்ந்து அறிந்து கொள்வதற்காக கனேடிய அரசினால் அனுப்பி வைக்கப்பட்ட இப் பேராசிரியர் முதற்கட்டமாக மட்டக்களப்புப் பகுதிக்கு விஜயம் செய்தார். இவர் அங்கு அரசாங்க அதிபர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்து நிலைமைகளை கேட்டறிந்து கொண்டார்.

இதன் பின்னர் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு இன்னும் உரிய தீர்வு காணப்படவில்லை என்பதை இங்கு வந்த பின்னரே என்னால் உணர முடிந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல அகதி முகாம்களுக்கும் சென்று பார்வையிட்டார்.

வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாத வரை கனடாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது சாத்தியம் இல்லை என்றும் கனேடியப் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

# இரண்டு தேர்தல்களும் ஒரேநாளில் நடக்கவேண்டும்

## - தினேஷ் குணவர்த்தனா

[கொழும்பு]

ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் இரண்டையும் ஒரே நாளில் நடாத்த வேண்டுமென எதிர்க்கட்சிக் கூட்டு முன்னணி, அரசைக் கோரவுள்ளது என மக்கள் முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

அண்மையில் காலி மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் மேலும் கூறுகையில்; எதிர்க்கட்சியினருக்கிடையே பிளவை ஏற்படுத்தி அதன் மூலம் தனது அரசையும் பதவியையும் தக்க வைத்துக் கொள்ள ஜனாதிபதி எண்ணுகிறார். அதற்கு சில அரசியல்வாதிகள் துணை செய்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணி பதவிக்கு வந்தால் இந்த அரசியல் திட்டத்தை மாற்றுவோம். மீண்டும் நாட்டில் ஜனநாயகத்தை மிளிர வைப்போம் எனவும் குறிப்பிட்டார்.

# மாணவர் பொதுக் கூட்டம்

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தின் கற்கை நெறிகளை மீளத் தொடங்குவது தொடர்பாகவும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை பற்றியும் ஆராய மாணவர் அமைப்பின் பொதுக்கூட்டமொன்று இன்று திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இன்று காலை ஒன்பது மணியளவில் நடைபெற இருக்கும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுப்படி மாணவர் நலன்புரி அமைப்பு சகல மாணவர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# புலமைப்பரிசில்பரீட்சை முடிவு ஆய்வு செய்யப்படும்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்குக் கிடைத்த ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் ஆய்வு செய்யப்படவுள்ளன.

அண்மையில் வெளியாகிய இப் புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தோற்றுவித்த சகல அதிபர்களும் தமது பாடசாலைகளின் இருந்து தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையையும் சித்தியெய்திய மாணவர்களின் எண்ணிக்கையையும் தத்தமது கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு 14-ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தெரிவு

(யாழ்ப்பாணம்)

அரச கணக்காளர்களின் யாழ். மாவட்டக் கிளைச் சங்கத்தின் நடப்பு வருடத்திற்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

''யூனிற்ரஸ்ற்'' எனப்படும் நவீன முதலீட்டைப் பற்றிய கருத்தரங்கு ஒன்று இன்று யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் நடைபெற உள்ளது

தொழில் நுட்பக் கல்லூரியில் இறுதியாண்டு கல்வி நெறியை முடித்து வெளியேறிய மாணவர்களின் நலன் கருதியே இக் கருத்தரங்கு

# பொருள்கள் இறக்குதல் நிறுத்தம்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் நேற்று நிறுத்தப்பட்டன. கடலில் ஏற்பட்ட கடும் காற்று, கடல் கொந்தளிப்பு காரணமாக வேலைகள் தடைப்பட்டன.

நேற்று முன்தினம் 'பெரினால்' கப்பலில் இருந்து கடல் காற்று கடல் கொந்தளிப்பின் மத்தியில் பொருள்கள் இறக்கப்பட்ட போதிலும் ஒரு சில தொழிலாளர்களுக்கு கை, கால்களில் காயம் ஏற்பட்டது.

(யோ)

# கபடிப் போட்டி

(வடமராட்சி)

தாயக மண் மீட்புக்காக வீரச்சாவடைந்த பருத்தித்துறை, கொட்டடி மாவீரர்களின் நினைவாக 'துள்ளு மீன்' விளையாட்டுக் கழகம் நாளை பிற்பகல் 4-00 மணிக்கு மாபெரும் கபடிச் சுற்றுப் போட்டியை நடாத்தவுள்ளது.

(யோ)

பி ரேம

வந்தது.

நடுநிலை உள்ள சிலர் அதனை ஆராய முன்வந்த போது நான் உடன் இணக்கம் தெரிவித்தேன். அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விடயங்களை எனக்குத் தெரிவித்த போது அவருடைய மனைவி என்ற வகையில் சர்வதேச ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு கேட்பதைத் தவிர வேறு மாற்று வழி இருக்கவில்லை.

சென்ற 2 ஆம் திகதி புதன் கிழமையன்று ஏனைய அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களுக்கு நிலைமையை எடுத்து விளக்கும் பொருட்டு குறிப்பிட்ட ஓர் இடத்தில் பிற்பகல் 2 மணிக்கு சமுகமளிக்குமாறு என்னிடம் கோரப்பட்டது உங்களுக்கு இதனை அறிவிப்பது எனது கடமை என்று நான் உணர்ந்தேன். ஜெனரல் ரணதுங்கவுடன் தொடர்பு கொண்டு அவருடைய ஆலோசனையையும் நான்நாடினேன்.

அந்த சமயத்தில் அறிக்கை அல்லது முறையீடு என்பவற்றின் பிரதிகள் என்னிடம் இல்லாதபடியால் அவற்றின் பிரதிகளை வரவழைத்து அவற்றின் பிரதிகளை கடிதத்துடன் உங்களுக்கு அனுப்பினேன்.

அதன் பின்னர் ஹோட்டல் லங்கா ஒபரோயில் கூட்டம் நடைபெறும் என எனக்குத் தெரிவிக்கப்பட்டதை

# தெரிவுக்குழுவின் தீர்வில் தமிழருக்கு நம்பிக்கையில்லை

## -ஆயர் அம்பலவாணர் தெரிவிப்பு

பாராளுமன்ற தெரிவுக்குழு ஓராண்டுகளுக்கு மேல் கூடி வந்திருக்கிறார்கள் அதைப் பற்றி தமிழ்மக்களுக்கு இருக்கும் சந்தேகம் என்னவெனில் அரசாங்கமோ அல்லது முக்கியமான எதிர்க்கட்சியோ தங்களுடைய அபிப்பிராயங்களை தெளிவாக அதற்கு முன்பாக வைக்கவில்லை எனவே பாராளுமன்ற தெரிவுக்குழு இதற்கொரு முடிவைபெற்று வரக்கூடும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை இவ்வாறு தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண பேராயர் பிஸப் அம்பலவாணர் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்; விடுதலைப் புலிகள் ஒரு வருடங்களுக்கு மேலாக பேச்சுவார்த்தை மூலம் ஒப்பந்தத்துக்கு வர தயாராக இருப்பதாக சொல்லி வருகிறார்கள். எங்களுடைய தமிழ் மக்களும் பொதுவாக பேச்சுவார்த்தைக்கூடாக ஒரு முடிவுவர வேண்டும் என்றே விரும்புகிறார்கள். புலிகள் இப்பொழுது பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பது குறித்து நான் சந்தோசப்படுகிறேன். இது அவர்களுடைய உண்மையான விருப்பம் என்று தான் நானும் நம்புகிறேன் என்றார்'

தறபோது போரில்புலிகளின் கை ஓங்கியிருப்பது போலத்தான் காணப்படுகிறது. அப்படியிருக்க அவர்கள் ஏன் அமைதிப் பேச்சுக்களில் ஆர்வம் காட்ட வேண்டும்? என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்,

'ஏனெனில் இராணுவத்தைப் பொறுத்த அளவில-விடுதலைப் புலிகளைப் பொறுத்த அளவில் எவர் பலம் எப்படியிருக்கிறது என்பதைப்பற்றி தெளிவாக கூற முடியாது. ஆனால் இரண்டு பிரிவினரும் வெற்றி அடைய முடியாது என்பதை நாங்கள் அறிவோம். எனவே இந்த நிலை தொடர்ந்து அநேக காலத்துக்கு இப்படியே போகாமல் ஒரு முடிவுக்கு வரவேண்டுமானால்பேச்சுவார்த்தை மூலம்தான் முடிவைக் காணவேண்டும்'' என்றார்

''குடாநாட்டிலிருந்து கொழும்புக்கு வருவதற்கு கடலுக்கூடாகதான் மக்கள் இப்பொழுதும் வருகிறார்கள் அதில் அபாயம் இருப்பதை அறிந்தாலும் அவர்கள் அதைப்பாவிக்கிறார்கள். அவர்களுக்கு வேறுவழியில்லை. எனவே அரசாங்கம் அதனை உணர்ந்து பொது மக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக இல்லாமல் இருக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய விருப்பம் என்றார்

## தமிழ்

பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்தனர். 24 பேர் காயமடைந்தனர். கோயம்புத்தூர், ஆம்பூர் கும்பகோணம், கன்னியாகுமரி மாவட்டம், வேலூர் ஆகிய இடங்களிலும் வன்முறைகள் இடம் பெற்றுள்ளன.

அம்பேத்கர் மாவட்டத்திலுள்ள ஆம்பூரில் கும்பல் ஒன்றின் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பொலிஸ் அதிகாரி உள்ளிட இருவர் காயமடைந்தனர். வேலூர், ஆம்பூர், சேரலாம்கட்டு, வாணியம்பாடி, விசாரம் ஆகிய பகுதிகளில் கடை அடைப்பு நடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. வேலூரில் சில பகுதிகளில் ஊரடங்கு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கோவையில் கும்பல் ஒன்றின் மீது பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பேர் காயமடைந்ததாகவும் கல்வீச்சில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட 12 பேர் காயமடைந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது. பல மாவட்டங்களில் தீவைப்பும் இடம் பெற்றன.

ஆயக்குடியில் ஆயிரம் பேர் கொண்ட கும்பல் போக்குவரத்தை மறித்து பஸ்களைச் சேதப்படுத்தினர்.

## அகதி

தடைகளை நீக்க வேண்டும். அதன் பின்பே நாம் முகாம்களை பராமரிப்பதுபற்றி பரிசீலிக்கலாம் எனப் பதிலளித்துள்ளனர்.

## ஐ நா.

விதித்திருக்கும் தடையை நீக்கி குறிப்பிட்ட பகுதிகளில் கரையோர மீன்பிடியை மேற்

## போசாக்கு

இணையத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்தனர் யூ. என். எச் சி ஆர் நிறுவன மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அகதிமுகாம்களில் உள்ள பிரச்சினைகள், தேவைப்பாடுகள், அகதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போசாக்கு இன்மை பற்றி அவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை திரிபோசா போன்ற போசாக்கு உணவுகளை உடனடியாக வடபகுதிக்கு எடுத்துவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இக்குழுவினர் கொக்குவிலில் ஆக்கப்பட்டுள்ள போசாக்கு நிலையத்தினையும் நேரில் சென்று பார்வையிட்டனர்.

மேற்படி பிரதிநிதிகள் வலிகாமத்தில் அமைந்துள்ள சில அகதிமுகாம்களை நேற்றுக் காலை நேரில் சென்று பார்வையிட்டதுடன் அவற்றைப் படம் பிடித்துக் கொண்டனர் இவர்கள் முகாம்களில் தங்கியுள்ள மக்களிடம் அவர்களது பிரச்சினைகள் பற்றி நேரில் கேட்டறிந்து கொண்டனர்

# சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

வேதாந்த மடத்தில் இன்று பி ப. 3 மணியளவில் ''பட்டினத்தார் துறவு'' என்ற தலைப்பில் பல்கலைப் புலவர் க சி. குலரத்தினம் அவர்களின் சொற்பொழிவு நடைபெற உள்ளது. இதனை குருபீடப் பரிபாலன சபையினர் ஒழுங்கு செய்துள்ளனர். (24

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா கனகசபை

[இணுவில் லிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்]

கந்தையா கனகசபை காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் (மணி), கணேசலிங்கம், ஆனந்த நடராசா, லோகநாயகி ஆகியோரின் அருமைத் தந்தையும், சிவராசா (ஞானேஸ்வரன் அரிசி ஆலை), சின்னராசா [லிங்கம் ஸ்ரோர்ஸ்], சிவகுமார் [கணேசன் ரெக்ஸ்], அருட்செல்வி, காந்திமதி, மனோகரி ஆகியோரின் மாமனாரும், அன்னம்மா, அருமைத்துரை ஆகியோ

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் கற்கை நெறிகளை மீளத் தொடங்குவது தொடர்பாகவும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை பற்றியும் ஆராய மாணவர் அமைப்பின் பொதுக்கூட்டமொன்று இன்று திறந்த பல்கலைக்கழகத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இன்று காலை ஒன்பது மணியளவில் நடைபெற இருக்கும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி மாணவர் நலன்புரி அமைப்பு சகல மாணவர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

களுக்கும் கிடைத்த ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் ஆய்வு செய்யப்படவுள்ளன.

அண்மையில் வெளியாகிய இப் புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தோற்றுவித்த சகல அதிபர்களும் தமது பாடசாலைகளில் இருந்து தோற்றிய மாணவர்களின்

## தெரிவு

(யாழ்ப்பாணம்)

அரச கணக்காளர்களின் யாழ். மாவட்டக் கிளைச் சங்கத்தின் நடப்பு வருடத்திற்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


புலிகளின் குரல்

# வெற்றிடங்கள்

புலிகளின் குரல் வானொலி நிலையத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பிரதம செய்தித் தொகுப்பாளர்
   - ★ தினசரிப் பத்திரிகை ஒன்றில் ஆசிரியராக கடமையாற்றிய அனுபவம் அல்லது இதற்குச் சமனான அனுபவம்.
   - ★ செய்தி தொகுப்பதில் நீண்டகால அனுபவம்
2. நிகழ்ச்சி அமைப்பாளர்
   - ★ கலை, இலக்கியத் துறையில் நீண்டகால ஈடுபாடு.
   - ★ இசைத் துறையில் நீண்டகால ஈடுபாடு.
3. மொழி பெயர்ப்பாளர்
   - ★ ஆங்கில நூல்கள், பத்திரிகைகளை தமிழாக்கம் செய்யும் திறமை
   - ★ சிங்கள மொழி அறிவு மேலதிக தகுதியாக கருதப்படும்.
4. வாத்தியக் கலைஞர்கள்
   - ★ வானொலி நிகழ்ச்சிகளிலும், இசைப்பாடல்களிலும் வாத்தியங்கள் வாசிப்பதற்குரிய திறமை.
   - ★ நீண்டகால அனுபவம்.

ஆரம்ப வேதனம்:

ரூபா 2,500/- இலிருந்து 4,500/- வரை அனுபவம் தகுதிக்கேற்ப வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தங்களது சுய விபரத்துடனான விண்ணப்பங்களை 1992 - 12 - 15-ம் திகதியன்றோ அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

பொறுப்பாளர்
புலிகளின் குரல்
திருநெல்வேலி

(சி-5551)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'சமநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


எண்ணிக்கையையும் தத்தமது கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு 14-ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

## கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

''யூனிற்ரஸ்ற்'' எனப்படும் நவீன முதலீட்டைப் பற்றிய கருத்தரங்கு ஒன்று இன்று யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் நடைபெற உள்ளது

தொழில் நுட்பக் கல்லூரியில் இறுதியாண்டு கல்வி நெறியை முடித்து வெளியேறிய மாணவர்களின் நலன் கருதியே இக் கருத்தரங்கு நடாத்தப்படுவதாக இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர் திரு க. கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகும் இக் கருத்தரங்கில் யாழ்.பிராந்திய இலங்கை வங்கியின் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவர் ஏனைய வர்த்தக மாணவர்களும் கருத்தரங்குக்குச் சமுகமளிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. 24)

## கலந்துரையாடல்

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல திணைக்களங்களினதும் தலைவர்களுக்கான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று இன்று நண்பகல் 11.00 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெற உள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கா.மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார். (24)

## முழுநிலா அறிவியல் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

முழுநிலா நாள் அறிவியல் கருத்தரங்கு ஒன்று இன்று மாலை 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

யாழ். இந்து பழைய மாணவர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கருத்தரங்கில் ''சமகால உலக சம்பவக் கொத்து'' எனும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. சத்தியசீலனும், ''கணிதமும் பொதுப் பயன்பாடும்'' எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கணிதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி. ஸ்ரீசற்குணராஜாவும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

வதற்கும் பொருட்டு குறிப்பிட்ட ஓர் இடத்தில் பிற்பகல் 2 மணிக்கு சமுகமளிக்குமாறு என்னிடம் கோரப்பட்டது உங்களுக்கு இதனை அறிவிப்பது எனது கடமை என்று நான் உணர்ந்தேன். ஜெனரல் ரணதுங்கவுடன் தொடர்பு கொண்டு அவருடைய ஆலோசனையையும் நான்நாடினேன்.

அந்த சமயத்தில் அறிக்கை அல்லது முறையீடு என்பவற்றின் பிரதிகள் என்னிடம் இல்லாதபடியால் அவற்றின் பிரதிகளை வரவழைத்து அவற்றின் பிரதிகளை கடிதத்துடன் உங்களுக்கு அனுப்பினேன்.

அதன் பின்னர் ஹோட்டல் லங்கா ஒபரோயில் கூட்டம் நடைபெறும் என எனக்குத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து பிற்பகல் 2 மணியளவில் இல்லத்தை விட்டு நான் புறப்பட்டேன் அங்கு சென்றதும் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதைக் கண்டு நான் திகிலடைந்தேன். ஏனைய அரசியல் கட்சி உறுப்பினர்களும் வந்து கொண்டேயிருந்தனர். எங்களை ஓர் அறைக்குள் அழைத்துச் சென்றார்கள். பிற்பகல் 2.40 மணியளவில் கூட்டம் ஆரம்பமாகியது. இத்தகைய கூட்டத்தில் சமுகமளிக்க நான் தயாராக இருக்கவில்லை. எனது மேன்முறையீட்டை வாசிக்கும்படி என்னிடம் வேண்டிய பொழுது நான் மறுத்துவிட்டேன். இதன் பிரதியொன்றும் உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த முறையீடு வாசிக்கப்படும் போது நான் அவ்விடமிருந்து விலகிச் சென்றேன்.

டென்சிலோ அல்லது நானோ எந்த சமயத்திலும் அரசியலில் ஈடுபாடு கொள்ளவில்லை என நான் மிக தெளிவாகக் கூற விரும்புகிறேன். அத்தகைய அபிப்பிராயம் உங்களுக்கு ஏற்பட்டிருந்தால் அதற்கு எனது மனமார்ந்த மன்னிப்பைக் கோருகிறேன்.

### அத்வானி

பரேரி, காவ்பூர் குஜராத்தின் சூரத். ஆமதாபாத் போன்ற நகரங்களில் கத்திக்குத்து மற்றும் தீயிடல் சம்பவங்கள் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது மேற்கு வங்காளத்தில் உள்ள கல்கத்தாவில் சில கடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. குஜராத்தில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்களில் இறந்தோரின் எண்ணிக்கை ஐம்பதுக்கும் அதிகமாகியிருக்கிறது.

மேலும் உத்தரப் பிரதேசம், குஜராத்மாநிலத்தின் சிலபகுதிகளில் காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது கர்நாடகத்தில் வன்செயல்களால் 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இரண்டு பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட 12 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. பல மாவட்டங்களில் தீவைப்பும் இடம் பெற்றன.

ஆயக்குடியில் ஆயிரம் பேர் கொண்ட கும்பல் போக்குவரத்தை மறித்து பஸ்களைச் சேதப்படுத்தினர்.

### அகதி

தடைகளை நீக்க வேண்டும். அதன் பின்பே நாம் முகாம்களை பராமரிப்பதுபற்றி பரிசீலிக்கலாம் எனப் பதிலளித்துள்ளனர்.

### ஐ நா.

விதித்திருக்கும் தடையை நீக்கி குறிப்பிட்ட பகுதிகளில் கரையோர மீன்பிடியை மேற்கொள்ள அனுமதிக்கும்படி அவர்களை கோருவ' எனவும் தெரியவருகிறது. மேலும் விவசாய உபகரணங்கள் மற்றும் மூலப் பொருள்கள், போசாக்கு உணவு வகைகளை வடபகுதிக்கு அனுப்புவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள தடைகளை நீக்குமாறும் கோருவர் எனத் தெரியவருகிறது.

### திருமதி

கடிதம் மூலம் கோரியிருந்தார்.

இக்கோரிக்கைக்குப் பதிலளித்த ஜனாதிபதியின் செயலாளர் விஜயதாச, இது தொடர்பாக திருமதி லலி கொப்பேகடுவவின் கடிதத்தின் மூலம் சகல விடயங்களையும் ஜனாதிபதி விளங்கிக் கொண்டுள்ளதாகவும் அத்துடன் திருமதி கொப்பேகடுவவின் விருப்பத்திற்கு இணங்க சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைக்க ஜனாதிபதி தயார் என அறிவித்துள்ளதாலும் அவரை நேரில் சந்திக்க அவசியமில்லை என ஜனாதிபதி கருதுவதாக தெரிவித்துள்ளார்.

மேலும் ஐ. நா. பொதுநலவாய, அல்லது 'சார்க்' நாடுகள் இவற்றில் எவ்வகையான சர்வதேச ஆணைக்குழு தேவை என்பதை மூன்று நாட்களுக்குள் தெரியப்படுத்துமாறு ஜனாதிபதி கேட்டுள்ளதாகவும் விஜயதாச கேட்டுள்ளார்.

### புதிய

பிரயோகம் செய்யப்பட்டது. சுமார் 3000 பொலிஸார் பாபர் மசூதி இருந்த இடத்தை நேற்றுத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகச்செய்திகள் கூறுகின்றன

### அயோத்தி

எனினும் கட்டப்பட்டுக் கொண்டிருந்த கட்டடமும், அதனுள் வைக்கப்பட்டிருந்த விக்கிரமும் பத்திரமாக உள்ளதாக கூறப்படுகிறது.

காலை நேரில் சென்று பார்வையிட்டதுடன் அவற்றைப் படம் பிடித்துக் கொண்டனர் இவர்கள் முகாம்களில் தங்கியுள்ள மக்களிடம் அவர்களது பிரச்சினைகள் பற்றி நேரில் கேட்டறிந்து கொண்டனர்

வத்தார் துறவு'' என்ற தலைப்பில் பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் அவர்களின் சொற்பொழிவு நடைபெற உள்ளது. இதனை குருபீடப் பரிபாலன சபையினர் ஒழுங்கு செய்துள்ளனர். (24


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா கனகசபை

[இணுவில் லிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்]

கந்தையா கனகசபை காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் (மணி), கணேசலிங்கம், ஆனந்த நடராசா, லோகநாயகி ஆகியோரின் அருமைத் தந்தையும், சிவராசா (ஞானேஸ்வரன் அரிசி ஆலை), சின்னராசா [லிங்கம் ஸ்ரோர்ஸ்], சிவகுமார் [கணேசன் ரெக்ஸ்], அருட்செல்வி, காந்திமதி, மனோகரி ஆகியோரின் மாமனாரும், அன்னம்மா, அருமைத்துரை ஆகியோரின் சகோதரரும், துரைராசாவின் மைத்துனரும், ஞானலோகினி, கோகுலன், ராகுலன், கோபிதன், சர்மிளன், தர்சியா, சங்கீர்தனன், பிரசாலதன், கஜேந்திரன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று பி. ப 2.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
[3772] து. சின்னராசா [மருமகன்]

## சூசை அருளப்பு

பாஷையூரைச் சேர்ந்த சூசை அருளப்பு (08-12-92) நேற்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற மாகிறேற்றின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை (யாழ். மாநகரசபை), அருளானந்தம் (ஜேர்மனி), அல்வின் தோமஸ், சில்வேஸ்ரர் (அவுஸ்ரேலியா), விவிரீடா, துரை, பிரான்சிஸ்கா தெரன்சியா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மணி, பவுண் (ஜேர்மனி), ராசாத்தி ராணி தங்கம் (அவுஸ்ரேலியா), மாணிக்கராசா, வேவி, டோமினிக், அல்வின் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் நல்லடக்கம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
[சி-5557] அ. தோமஸ் [மகன்]


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

08.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 7041

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

28-2589 24-4917, 28-2657, 27-5682, 42-9112, 42-2862 41-9167, 24-3178, 22-9127, 24-1983, 24-6293, 24-5679, 24-9856, 26-7393, 40-6759, 26-6775, 27-7740, 27-1292 27-9070, 28-9497, 28-1730, 28-6179, 27-1637, 27-9033, 27-2143

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-2299, 27-8999, 24-6759, 26-0594, 42-6226, 42-0970 26-3146, 40-1352, 41-9166, 24-5774, 41-8467, 41-9175, 27-9136, 28-9186, 27-9771.